[20th July 1957

SRI K. ANBAZHAGAN : மாவட்டங்களின் தலைநகரங்கள் அந்தந்த மாவட்டத்திற்கு உள்ளாகவேதான் இருக்கவேண்டும். வெளியில் இருக்கக் கூடாது. மாவட்டத் தலைமைக் காரியாலயங்கள் அந்தந்த மாவட்டத்திலே நிறுவப்பட வேண்டுமென்ற கொள்கை அரசாங்கத்தாரால் வலியுறுத்தப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: எல்லாப் பிரச்னைகளும் கவனிக் கப்படுமென்று நான் முன்பே சொன்னேன். அந்த சப்-கமிட்டியிலே இருப்ப வர்களும் இங்கிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சொல்லியதையும் அவர் கள் கவனித்திருப்பார்கள்.

Unemployment among the educated

* 171 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have taken any statistics in regard to the educated unemployed in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : No survey has been undertaken by the Government in regard to educated unemployed in the State. The figures available with the District Employment Offices show that the number of educated unemployed who registered their names in District Employment Offices in the State for the period from 1st October 1956 to 31st March 1957 is 19,811.

SRI S. PAKKIRISAMI PILLAI : படித்தவர்களின் எண்ணிக்கை வருஷா வருஷம் அதிகப்பட்டுகொண்டிருப்பதாலும், அவர்களுக்குப் போது மான அளவு வேலையில்லாத நிலைமை நீடித்துக் கொண்டு போகும்படியான சூழ்நிலை இருப்பதன் காரணத்தாலும் அப்பேர்ப்பட்ட படித்த வாலிபர்கள் மிகவும் கேவலமான நிலையில் போகாமல் இருப்பதற்காக, அவர்களுக்கு வேலையில்லாத அலவன்ஸ் கொடுப்பதற்கு ஏதாவது யோசனை அரசாங்கத் தாரிடம் இருக்கிறதா? அப்படியில்லையானால், அதைப்பற்றி ஆலோசனை செய்வதற்கு திட்டம் வகுக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : வேலையில்லாத் திண்டாட்ட நிவாரணம் அளிப்பது (அன்எம்ப்ளாய்மெண்ட் இன்ஷூரன்ஸ்) என்பது மிகவும் அதிகச் செலவு ஆகக்கூடியது. அதை ஏற்றுக்கொண்டு நடத்த சர்க் காரால் இப்போது இயலாது. ஆகையால், கனம் அங்கத்தினர் படித்த வேலையில்லாதவர்களுக்கு மாத்திரம் இந்த மாதிரி இன்ஷூரன்ஸ் திட்டம் வகுக்க வேண்டுமென்று சொன்னால், அதை ஒரு "டிஸ்கிரிமினேஷன்" என்று கருதி, அரசாங்கம் அதை ஏற்க மறுக்கிறது.

Khadi centres

* 172 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of centres organized by the Government for the production and sale of Khadi in each district with their location;

(*b*) the staff employed in the depots for production and sale; and

(*c*) the total value of the sales during 1956–57?

20th July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A statement [a] showing the number of centres organized by the Government for the production and sale of Khadi in each district with their locations is placed on the table of the House.

(*b*) For production centres—

Staff in main centres	45
Staff in sub-centres	140

For sales depots—

(For City sales depots.)

Managers	3
Assistant Managers	2
Sales Assistants	3
Boy Attendants	3
Watchman	3
Total ...	14

(For the mufassal sales depots.)

I Grade Assistants	5
II Grade Assistants	5
Total ...	10

Number of persons employed in the Sales depots 24

(*c*) Rs. 49,16,529.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்காரின் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டின்படி 1953–54ஆம் ஆண்டிலே நூல் நூற்பவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு முக்கால் ரூபாயும் தறி நெய்தவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஆள் ஒன்றுக்கு 16 ரூபாயும் கூலி கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு மோசமான கூலி கொடுத்தும் ரூ. 4 லக்ஷம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இது ஏழைகளைக் காப்பாற்றக்கூடிய திட்டம் இல்லையென்பதை உணர்ந்து ஏழைகளைக் காப்பாற்றக்கூடிய அளவுக்கு இந்தப் பணத்தை குடிசைத் தொழிலுக்கு உபயோகப்படுத்தி, அதை அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் முன்வருமா?.

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : கதர் தொழில் குடிசைத் தொழில்களில் தலை சிறந்தது என்று அரசாங்கம் கருதுகிறது. இதனால், நான் ஏற்கனவே விளக்கியதுபோல் வேறு வேலை செய்ய முடியாதவர்களுக்கு வேலை கிடைக்கிறது. அவர்களுடைய ஜீவனத்திற்கும் வழி ஏற்படுகிறது. சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கும் கதர் திட்டத்தினால் சுமார் 90,000 பேருக்கு வேலை கிடைத்து அவர்களுக்கு ஊதியம் கிடைக்கிறது. இல்லாவிட்டால் அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுவார்கள். 1954–55-ஆம் ஆண்டில் கதர் திட்டத்திற்காகச் செலவு ரூ. 69,37,000. அம்பர் சர்க்காவுக்காக செலவு ரூ. 1,52,000. இரண்டுக்கும் சேர்த்து ரூ. 70,89,000. விற்பனையால் நமக்குக் கிடைப்பது ரூ. 49,24,000. மீதி ரூ. 21,65,000-க்கு ஸ்டாக்கு இருக்கிறது. ஆகையால், இப்பொழுது நிர்வகிக்கப்படுகின்ற திட்டத்தால் நஷ்டம் ஒன்றுமில்லை. இதனால் 90,000 பேருக்கு வேலை கிடைக்கிறது.

---

[a] Printed as Appendix I on pages 84–85 infra.